Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S
Polyclinic

பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டும்; பிரதமர் வலியுறுத்தல்

சென்னை 24, அக்டோபர் 2026: நமது கல்வி முறை யானது புதிய இந்தி யாவின் தேவை களுக்கு ஏற்ப அமைய வேண்டும் என்று பிரதமர் மோடி குறிப் பிட்டுள்ளார். எனவே நாங்கள் ஒரு புதிய தேசிய கல்விக் கொள் கையை அறிமுகப் படுத்தியுள்ளோம். இக்கொள்கையானது இந்திய அறிவுப் பாரம்பரியம், தாய் மொழிக் கல்வி, நவீன அறிவியல் மற்றும் புதிய தொழில் நுட்பம் போன்றவற் றுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக் கிறது என்றார்.

தேசிய கல்விக் ª காள்கையானது பாரம்பரிய இந்திய அறிவு முறைகளை அதி நவீன தொழில்நுட் பத்துடன் இணைக் கிறது என்றும், நவீன இந்தியக் கல்வியானது பண்டைய மரபுகளை நவீன அறிவியல் முன்னேற்றங்களுடன் ஒன்றிணைக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

சின்மயா அம்ரித் மகோத்சவ் உலக ளாவிய மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், இ ந் தி ய £ வி ன் பண்டைய அறிவை மீட்டெடுப்பதற்கும், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி பெற்ற இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கு வதற்கும் பொதுமக்க ளின் நலனுக்காகத் தனிப்பட்ட முறையில் இயங்கும் சமூக அமைப்புகளின் பங் களிப்பு முக்கியமானது என்று வலியுறுத்தினார்.

பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று பிரதமர் மோடி வலி யுறுத்தினார். மேலும் இந்திய சமூகத்திற்கு உருவாகி வரும் சவால் களை கையாள்வது நம் அனைவருக்குமான ஒரு பகிரப்பட்ட தேசிய பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார். நம்மைப் பிரிக்க முற்படும் சக்திகளுக்கு எதிராக நாம் சமூகத்தை ஒ ன் றி ¬ ண க் க வேண்டும். தற்சார்பின் முக்கியத்துவம் குறித்து நமது சக குடிமக்க ளிடையே விழிப்புணர் வை ஏற்படுத்த வேண்டும். 2047-ஆம் ஆண்டுக்குள் ஒரு விக்ஸித் பாரதத்தை உருவாக்கும் தீர்மா னத்தில் ஒவ்வொரு தனிநபரும் ஈடுபட வேண்டும் என்றார்.